# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064818

1. District மாவட்டம் : Chennai | PS: காவல்நிலையம் VIAC Chennai City-I | Year ஆண்டு: 2021 | FIR No. மு.த.அ. எண்: 01/AC/2021/CC-I | Date: நாள் 11-01-2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: -

   (iii) Act சட்டம்: - | Sections பிரிவுகள்: -

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 7/1/2021/1430 | Date to : நாள் வரை 11/1/2021/0930

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11-01-2021 | Time : நேரம் 10.45

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் CMWSSB, Ponnusamy Street, Cheriyan Nagar, New Washermanpet, Chennai-81 - about 21 kms North

   Beat Number : முறைக் காவல் எண் - | (b) Address : முகவரி -

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. M. Jayakumar | (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S/o Madhava rao

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2021 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - | Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

   (f) Occupation : தொழில் Advocate | (g) Address : முகவரி Door No. 4/7, Kannu Street, New Washermanpet, Chennai-81

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Rao, CMWSSB, Assistant Ponnusamy Street, Cheriyan Nagar, New Washermanpet, Chennai-81

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate Sheet Enclosed herewith —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(M. JAYAKUMAR) 11/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11-01-2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A. SIVA ANANTH
Rank: நிலை Inspector of Police, VEAC/CC-I. No. எண் .........

* GCP-240-34(Type-2) 90.000 Cps -21.3.16(HCL-12)p 2

முதல் தகவல் அறிக்கை Column -12 :

நான் 11.01.2021ந்தேதி அலுவலகத்தில் இருந்தபோது காலை சுமார் 10.45 மணியளவில் சென்னை, புதுவண்ணாரபேட்டை, கண்ணு தெருவில் கதவு எண். 4/7 என்ற முகவரியில் வசிக்கும் மாதவராவ் மகன் M. ஜெயக்குமார் என்பவர் எழுத்துமூலமாக கொடுத்த புகாரினை பெற்று புகார் சம்பந்தமான ரகசிய விசாரணை செய்து திருப்தியடைந்து V&AC, CC-I, Cr.No. 01/AC/2021/CC –I, u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:-11.01.2021 ,அனுப்புநர்: M. ஜெயக்குமார், வயது 49/2021, த/பெ. மாதவராவ், கதவு எண். 4/7, கண்ணு தெரு, புதுவண்ணாரபேட்டை, சென்னை - 600 081. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை - 600 016. ஐயா, நான் சென்னை, புதுவண்ணாரபேட்டை, கண்ணு தெருவில் கதவு எண். 4/7ல் வசித்து வருகிறேன். நான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்சொன்ன இருப்பிடமானது எனது மனைவியின் சித்தப்பா திரு.மாசிலாமணி என்பவருக்கு சொந்தமான வீடாகும். மேற்குறிப்பிட்ட முகவரியில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் வசித்து வருவதுடன் அதன் பராமரிப்புகளையும் கவனித்து வருகிறேன். மேற்குறிப்பிட்ட வீட்டினை கடந்த 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் வீட்டின் கட்டிடம் பாழடைந்து புதுப்பிக்க வேண்டிய நிலையிலிருந்ததால், சில மாதங்கள் நாங்கள் வாடகைக்கு வெளியில் குடியிருந்தோம். இந்த வீட்டின் புதுப்பித்தல் வேலை முடிந்தவுடன், மீண்டும் இந்த வீட்டில் குடியேறிய நிலையில், எங்களது குடிநீர் தேவைக்காக புதிய குடிநீர் இணைப்பு வேண்டி திரு.மாசிலாமணியின் பெயரில் விண்ணப்பித்து அதற்கான அரசு கட்டணம் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரூ.38,280/-யை உரிய வரைவோலைகள் முறையே IDBI Bank (Old Washermanpet) ன் “D.D. No. 007109, dated 22.09.2020 of Rs.30,780/- in favour of CMWSSB, Chennai – 02” மற்றும் “D.D. No. 007110, dated 22.09.2020 of Rs.7500/- in favour of CMWSSB, Chennai – 02” எடுத்து அனைத்து ஆவணங்களுடன் புதிய குடிநீர் இணைப்பு சம்பந்தமாக Assistant Enginner Office, செரியன்நகர், புதுவண்ணாரபேட்டை சென்று Assistant Engineer Thiru. Bewin அவர்களை அணுகி, அவரிடம் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டது. அவர் மேலிடத்தில் Signஆகி வர வேண்டியுள்ளது, சில நாட்கள் கழித்து தன்னை வந்து பார்க்கும்படி என்னிடம் கூறினார். அதன்பிறகு பல தடவை இது தொடர்பாக அவரை சந்தித்தபோது, காலம் தாழ்த்தி வந்தனர். அதன்பிறகு 05.01.2021 அன்று அவரை சந்தித்தபோது காலை சுமார் 10.00 மணியளவில் சந்தித்தபோது, எல்லாம் வந்து விட்டது. அவர் அவருடைய Assistant-ஆன திரு. ராவ் அவர்களைபார்க்கும்படி கூறினார். அதன்பிறகு கடந்த பின்பு

07.1.2021 சுமார் 2.30 மணியளவில் திரு.ராவ் அவர்களை சந்தித்தபோது, அவர் தனக்கு தனியாக ரூ.20,000/- கொடுக்கும்படி கேட்டார். நான் அதற்கு இது ரொம்ப அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறையுங்கள் என்று கூறினேன். அதற்கு திரு.ராவ் அவர்கள் ரூ.15,000/- தனக்கு கொடுங்கள் என்றும், வேலை செய்பவர்களுக்கு தனியாக ரூ.10,000/- கொடுங்கள் என்று என்னிடம் கூறினார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். அதன்பிறகு இன்று (11.01.2021) காலை சுமார் 9.30 மணியளவில் திரு.ராவ் அவர்களை சந்தித்து குடிநீர் இணைப்பு பற்றி மீண்டும் கேட்டேன். அந்தசமயம் இதர ஊழியர்கள் அங்கிருந்ததால், திரு.ராவ் அவர்கள் என்னை அழைத்துக்கொண்டு, அந்த அலுவலகத்தின் வளாகத்திற்குள் என்னை தனியே அழைத்து வந்தபோது, எனக்கு கொஞ்சம் பண கஷ்டமாக உள்ளது, இன்னும் கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டபோது, இறுதியாக புதிய குடிநீர் இணைப்பு தரவேண்டுமென்றால் ரூ.12,000/- தனக்கு தனியாகவும், வேலை செய்பவர்களுக்கு தனியாக ரூ.5,000/- கொடுத்தால் தான் குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்ததுடன், பணத்துடன் தன்னை சந்திக்கும்படியும் சொன்னார். அவர் கேட்பது லஞ்சம் பணம் என்று எனக்கு தெரிந்தது. இதை எனது சிறிய மாமனரும், எனது மனைவியின் சித்தப்பாவுமான திரு.மாசிலாமணி அவர்களிடம் சொன்னபோது, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி என்னிடம் தெரிவித்தார். எனக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. ஆகையால் என்னிடம் பணம் லஞ்சமாக கேட்ட, புது வண்ணாரபேட்டை, பொன்னுசாமி தெரு, செரியன் நகரில் அமைந்துள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ராவ் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர் மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கிறேன். இப்படிக்கு கையொப்பம் XXXX

I received the above complaint today on 11.01.2021 at 10.45hrs and after conducting discreet enquiry, I register a case in Vigilance and Anti –Corruption, Chennai City – I Detachment in Cr.No.01/AC/2021/CC –I u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 today on 11.01.2021 at 12.30 taken up for investigation. I herewith submit the original F.I.R and the complaint to the Hon'ble Special Court for the Case under the Prevention of Corruption Act, Chennai. I also forward the copy of F.I.R to the officer's concerned.

11/01/2021

Inspector of Police,
VLAC, CC-I.
Chennai.